ஆணையத்தில் பணிபுரிகின்ற ஒவ்வொரு உறுப்பினருக்கும் உள்ள அனைத்து அதிகாரங்களும் அவர்களுக்கான தகுதிகளை வரையறுத்துத்தான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். வாரியத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும், ஆணையத்திற்கு ஒருவேளை குறைவாக அதிகாரம் இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்கள். அப்படியல்ல; ஆணையம் என்பது அதிகாரமிக்கது. அதேசமயத்தில், அதனை Act பிரகாரம்தான் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகவே, வாரியம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

சிப்காட் தொழிற்பேட்டை

***26846—திரு. கு. இராதாமணி:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விக்கிரவாண்டி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை துவங்குவதற்கான உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2019 ஜனவரி 4]

திரு. கு. இராதாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

எனது விக்கிரவாண்டி தொகுதி என்பது, மிகவும் பிற்படுத்தப்பட்ட, வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற மக்களை அதிகம் கொண்ட ஒரு தொகுதியாகும். விக்கிரவாண்டியைச் சுற்றி 2 கிலோ மீட்டர் அளவில், நான்கு பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கிருக்கின்ற ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த நிறைய இளைஞர்கள், பொறியியல் பட்டதாரிகளாக, ஆண்டுதோறும் படித்துவிட்டு வெளியில் வருகின்றார்கள். ஆனால், அங்கு அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. வேலைவாய்ப்பினைத் தேடி அவர்கள் வெளி மாநிலங்களுக்கும், வெளி மாவட்டங்களுக்கும் செல்லக்கூடிய ஒரு துர்பாக்கிய சூழ்நிலை உள்ளது. ஆகவே, அவர்களுடைய வாட்டத்தைப் போக்க அங்கே சிப்காட் தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில் 571.98 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அங்கு புதிய தொழிற்பேட்டை வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. விக்கிரவாண்டி பகுதியில் இருக்கின்ற தொழில்முனைவோர்கள் யார் முன்வந்தாலும், அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான நிலத்தினைக் கையகப்படுத்தி, அவர்களுக்குண்டான தொழில் மனைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.*

திரு. கு. இராதாமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி தொகுதியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கு, எங்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் பரிசீலிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 60 ஏக்கருக்கு மேலாக பஞ்சமி மற்றும் தரிசு நிலங்கள் விக்கிரவாண்டிக்கு அருகிலே உள்ள வடகுச்சிபாளையம் என்ற கிராமத்தில் இருக்கின்றன. ஆகவே, நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஆகையால், அரசு அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைத்து, அங்கிருக்கின்ற பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க முன்வர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கோரிக்கை வைக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றால், 60 ஏக்கர் நிலம் போதாது. 60 ஏக்கர் நிலத்தில் சிட்கோ தொழிற்பேட்டையைத்தான் அமைக்க முடியும். சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்றால், 500 ஏக்கர், 600 ஏக்கர், 1,000 ஏக்கர் நிலம் தேவை. அதற்குண்டான வழிவகை விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எந்தப் பகுதியிலும் இல்லை. எனவே, அங்கு தொழிற்பேட்டை அமைப்பதற்குண்டான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*